# தமிழக பொலிஸ் துறைக்குள் புலிகள் ஊடுருவல்

## ஆளுநர் சாடல்

(சென்னை) தமிழ்நாடு மாநில பொலிஸ் துறையில் புலிகள் ஊடுருவி விட்டதாக தமிழக ஆளுநர் எம். சென்னா ரெட்டி குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக இந்திய உள்துறை அமைச்சருக்கு திரு. சென்னா ரெட்டி கடிதம் (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 9 இதழ் 340
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22-1-1994

## இந்திரா, ராஜீவ் அரசுகள் புலிகளுக்கு உதவின!

(சென்னை) இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசுகள் 1983-ம் ஆண்டிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மற்றும் இதர போராளிகளுக்கும் உதவியும் (4-ம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி ஓர் முதல்தர சந்தர்ப்பவாதி!

(சென்னை) ஜெயின் கமிஷன் முன் கருணாநிதி தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் இந்திய அமைதிப்படை பற்றி கருணாநிதி குறிப்பிட்டுள்ளதை சுட்டிக் காட்டி, கருணாநிதி (4-ம் பக்கம் பார்க்க

# தமிழீழ விடுதலை போராட்டத்திற்கு எதிராக தென்பகுதியில் புதிய அமைப்பு

## சிங்கள இனவாதிகள் முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலை போராட்டத்திற்கு எதிராக சிங்கள இனவாத அமைப்பொன்றை நிறுவும் முயற்சியில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மற்றும் புத்திஜீவிகள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக அறியப்படுகிறது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

தமிழ் மக்களுக்கு எதுவித மேலதிக உரிமையும் வழங்கப் படக்கூடாது என்பதே பிரதான நோக்கம் என இவ் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ் அமைப்பில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகி (2-ம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பின் எதிரொலி 9 பொலிஸ் இடைநிறுத்தம்

(கொழும்பு) றம்பாவ பஸ் குண்டுவெடிப்பு தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸ் புலனாய்வுக்குழு ஒன்பது பொலிஸ் கான்ஸ்டபிள்களின் சேவையை இடைநிறுத்தியுள்ளது.

குண்டு வெடித்த பஸ்ஸை சரியான விதத்தில் சோதனை செய்யத் தவறினர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த ஒன்பது பொலிசாரும் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸ் உயரதிகாரி எஸ். சேனாரத்ன தெரிவித்தார்.

குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றபோது இந்த ஒன்பது பொலிசாரும் மதவாச்சியிலுள்ள காவல் நிலையங்களில் கடமையில் ஈடுபட் (2ம் பக்கம் பார்க்க)

## 16 பொலிஸார் மீது ஒழுங்கு நடவடிக்கை

(கொழும்பு) வடமத்திய மாகாணத்தின் றம்பாவ என்னும் இடத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக 16 பொலிசார்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக தெரிய வருகிறது.

இக்குண்டு வெடிப்பில் (2ம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் தாக்குதலுக்கு இந்திய அரசு கண்டனம்

(புதுடில்லி) தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் அண்மையில் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகச் சம்பவம் குறித்து இந்திய தூதரகம் வன்மையான கண்டனத்தை இலங்கை அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது.

இரு வேறு தடவைகள் இத்துப்பாக்கிப்பிரயோகம் இடம்பெற்றதாகவும் இந்திய தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதுவிடயம் தொடர்பாக இந்திய தூதரகம் தெரிவிக்கையில்,

முதல் சம்பவம் இம்மாதம் 16ந்திகதி இடம்பெற்றதாகவும் இதன்போது தமிழக மீனவர் நால்வர் காயமடைந்ததாகவும் (2-ம் பக்கம் பார்க்க)

### தாக்குதல்களை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

(சென்னை) தமிழக மீனவர்களை சிறிலங்கா படையினர் தாக்குவதை தடுக்க உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை விரைந்து எடுக்கவேண்டுமென பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கு முதல்வர் ஜெயலலிதா அவசர கோரிக்கை விடுத்துள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

## மு. காங்கிரஸ் தலைவருக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு) எனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. கொலைப் பயமுறுத்தல்களுடன் கூடிய அனாமதேயத் தொலைபேசி அழைப்புகள் எனக்கு வருகின்றன. திகாமடுல்ல நாடாளுமன்ற எம்.பியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான எம். எச். எம். அஷ்ரப் நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார். (4-ம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. அதிகாரி செவ்வாய் யாழ். வருவார்!

(கொழும்பு) அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு அதிகாரியான கலாநிதி பீற்றர் நிக்கிலஸ் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார். வடபகுதியில் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிக (4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவம் - அதிரடிப்படை கிழக்கில் முறுகல் நிலை!

(மட்டக்களப்பு) மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விசேட அதிரடிப் படையினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் செல்லக் கூடாதெனவும் இராணுவத்தினரால் அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் சிறிலங்கா இராணுவம் முற்றாக வெளியேறிய பின்னரே அப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் தமது நிலைகளை அமைத்து வருகின்றனர். (ரி)

## ஐ. தே. கவுடன் இணைய ஜ.ஐ.தேசிய முன்னணி முடிவு

(கொழும்பு) ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள தற்போது முடிவு செய்துள்ளது. பொது முன்னணியுடன் இணைந்து செயற்படுவது சிரமமாக இருப்பதன் காரணமாகவே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐ.தே. கட்சியுடன் இணைந்து கொள்ள முடிவு செய்துள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலர் ஜி. எம். (4-ம் பக்கம் பார்க்க)

## மேல் மாகாண சபைக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு) மேல்மாகாண சபைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள் தயாராகி வருவதாக ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி அங்கத்தவர் திரு [illegible] தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் இந்தப் பிரே (2ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஆசிரியை ஒருவருக்கு தனி அறை தேவை. சாப்பாட்டு வசதியுமிருப்பின் விரும்பத்தக்கது. விளம்பர இல. 742 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (இ-742)

### மணமகன் தேவை

பூரட்டாதி நட்சத்திரம் 28 வயது அழகிய ஆசிரியைக்கு மணமகன் தேவை. பட்டதாரி ஆசிரியர், கணக்காளர், என்ஜினியர் விரும்பத்தக்கது. செ. விசயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய், மூர்த்த நயினார் கோவிலடி ஆனைக்கோட்டை - லக்சுமி திருமண சேவை. (இ-737)

### ஆங்கில கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரிடமிருந்து ஆரம்ப ஆங்கில அறிவிலிருந்து A/L, G. A. Q. வரையிலான அறிவைப் பெற விரும்புவர்கள் உங்கள் இருப்பிடத்தை சுலபமாக வந்தடையக்கூடிய வகையில் எழுதினால் நேரில் தொடர்பு கொள்ளப்படும். விளம்பர இல. 724, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். இ-724

### மணமகன் தேவை

இந்து மதம் பூரட்டாதி நட்சத்திரம் செவ்வாய்குற்றமற்ற படித்த 24 வயது பெண்ணுக்கு மணமகன் தேவை. G. V. Kanesalinkam, C/o Paramanatha, Uyarappulam, Anaikoddai. C 735

### விற்பனைக்கு

மரக்கறி எண்ணெய் தகரங்கள், பழைய பத்திரிகைகள், சாக்குகள், உரபாக்குகள், நீம் வகைகள் விற்பனைக்குண்டு. ஈழநாடு லிமிட்டெட் காரியாலயத்துடன் தொடர்பு கொள்க. (எ-3780)

### வாருங்கள் திருத்திப்பாருங்கள்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். உதிரிப்பாகங்களுக்காக நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். டிலக்சா வாச் அன் றேடியோ ஹவுஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானலிக் கூட்டுத்தாபன அருகில்) கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-738)

**16 பொலிஸார்**
(1ம் பக்கத் தொடர்ச்சி)
போது குறிப்பிட்ட பஸ் வண்டி பல மீற்றர் உயரத்திற்கு தூக்கி எறியப்பட்டதாகவும் கூறப்படுகிறது.
—உ-பி

**தமிழக**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இச்சம்பவத்தில் காணாமல் போன மூன்று மீனவர்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளது.
அடுத்த நாள் நடைபெற்ற மற்றைய சம்பவத்தில் ஒரு தமிழக மீனவர் கொல்லப்பட்டதாகவும் காயமுற்ற மற்றைய நபர் நீந்தி தமிழக கரையை அடைந்துள்ளதாகவும் மற்றொருவர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளது.
—உ-பி

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
[22-01-1994]



## செல்வன் கிருஷாந் மனோகரன்

கனடாவில் வசிக்கும் மனோகரன் - மணமல்லி தம்பதிகளின் செல்லப்புதல்வன் கிருஷாந் தனது முதலாவது பிறந்த தினத்தை 22-01-1994 சனிக்கிழமை ரொறன்ரோ நகரில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை குப்பிளானைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார் (கனடா) மாமா (கனடா), வசி சித்தப்பா (லண்டன்), ராஜ் சித்தப்பா (கனடா) நாவற்குழியைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா, ஜனகன் மாமா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் சித்தி விநாயகர் அருளால் சகல கலைகளையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: இ. சொக்கலிங்கம் (ஆசிரியர்)
நாவற்குழி
கைதடி
(ஏ-3779)

## விலை குறைப்பு

22 - 01 - 1994 சனிக்கிழமை தொடக்கம்
நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடையில்
1 கிலோ இறைச்சி ரூபாய் 80/- வீதம் விற்கப்படும்.

தகவல்:
நாவாந்துறை
மாட்டிறைச்சிக்கடை உரிமையாளர்கள்.
(இ-743)

## தொழில்நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம்

## கல்வியாண்டு ஆரம்பம்

எமது கல்லூரியின் 1994-ம் கல்வியாண்டு ஆரம்பமாகும் புதிய திகதிகள் பின்வருமாறு இருக்கும் என்பதனை அறியத்தருகிறேன்.

1. பகல் நேர புதிய மாணவர்களுக்கு — 1994 - 01 - 31
2. பகல் நேர 2-ம், 3-ம், 4-ம் ஆண்டு மாணவர்களுக்கு — 1994 - 02 - 01
3. மாலை நேர / பகுதி நேர புதிய மாணவர்களுக்கு — 1994 - 02 - 05
4. மாலை நேர / பகுதி நேர 2-ம், 3-ம், 4-ம் வருட மாணவர்களுக்கு — 1994 - 02 - 06

க. ஜெயரத்தினம்,
அதிபர்,
தொழில் நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1994 - 01 - 21. (எ 3781)

## இடம்பெயர்ந்த குரும்பசிட்டி மாணவருக்கு இலவச சீருடைகள்

(உடுவில்)
குரும்பசிட்டி கிராமத்தில் இருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு தேவையான பள்ளிச் சீருடைகளை இலவசமாக வழங்க குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் முன்வந்துள்ளனர்.

குரும்பசிட்டி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் நிரந்தர வதிவிடங்களைக் கொண்டு இடம்பெயர்ந்த மாணவர்களுக்கே இவ்வாறு சீருடைகள் வழங்கப்பட உள்ளன.

கனடாவில் உள்ள குரும்பசிட்டி நலன்புரிச்சபை மற்றும் சுவிஸ் வாழ் குரும்பசிட்டி இளைஞர்கள் ஆகியோர் இச் சீருடையை வழங்குவதற்கு தேவையான நிதியுதவியை வழங்கியுள்ளனர்.
(109)

**மேல் மாகாண**
(1ம் பக்கத் தொடர்ச்சி)
ரணை சமர்ப்பிப்பதற்கான இரகசிய ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் காமினி ஆதரவாளர்களின் ஒத்துழைப்பை இந்தப் பிரேரணைக்குப் பெற்றுக்கொள்ளும் விதமாக ஐ. தே. க. உறுப்பினர்கள் செயல்பட்டு வருவதாகவும் சுசில் குலதுங்க குற்றஞ்சாட்டினார்.

**குண்டு வெடிப்பின்**
(1ம் பக்கத் தொடர்ச்சி)
டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளையில் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தரவுகளை சரியான முறையில் நிறைவேற்றத் தவறியதால் இவர்கள் சேவை இடைநிறுத்தப்பட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.
—இ-மி

**தமிழீழ**
1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஜோர் அங்கம் வகிப்பதுடன் மேலும் கலங்கள இனவாத அமைப்புகளும் இதில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.—சர்

## வைத்தியர் தேவை

யாழ் நகரின் மத்தியில் இயங்கி வரும் வைத்திய சிகிச்சை நிலையத்திற்கு (CLINIC) குழந்தை வைத்தியத்தில் அனுபவம்மிக்க வைத்தியர் (M. B. B. S.) முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ கடமையாற்றத் தேவை. ஓய்வுபெற்றோர், இடம்பெயர்ந்தோர் விரும்பத்தக்கது.

★ 31-01-1994க்கு முன் விண்ணப்பிக்கவும்

விளம்பர இலக்கம் 3776
C/o ஈழநாடு
யாழ்ப்பாணம்
(எ-3776)

# நீங்காத நினைவில்
## 31-ம் நாள்



அமரர்
## இளையதம்பி வன்னியசிங்கம்

தோற்றம்: 23 - 6 - 1924 மறைவு: 23 - 12 - 1993

அன்போடும் பாசத்தோடும் எங்கள் குடும்பத்தின்
ஒளி விளக்காய் திகழ்ந்து எம்மை
பாரினில் பெயரோடு வாழ வைத்த
அன்புத் தெய்வமே! எம் கனவிலும் நினைவிலும்
உங்கள் அன்பும் கருணையும் என்றும் நிலைத்திடும்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

பொன்னாலை, சுளிபுரம். (இ-745)

# இந்தியாவில் 50 லட்சம் பேர் எயிட்ஸினால் பாதிக்கப்படுவர்

(சென்னை)

இரண்டாயிரமாவது ஆண்டுக்குள் இந்தியாவில் முப்பது லட்சம் முதல் ஐம்பது லட்சம் பேர் வரை எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படுவார்கள் என்று மதிப்பிடப்படுவதாக இந்திய சுகாதார நிறுவனத்தின் தலைமைச் செயலாளர் டாக்டர் ஐ எஸ் கில்டா கூறியிருக்கிறார்.

எயிட்ஸ் நோய் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அரசு கூடுதல் நிதியை ஒதுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை எயிட்ஸ் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை பரப்புவதற்காக சென்னை வானொலி நிலையம் எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. (ம)

# 10,000 இலங்கையருக்கு கொரியா வேலைவாய்ப்பு

(கொழும்பு)

பத்தாயிரம் இலங்கையர்களை வேலைக்கமர்த்திக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள வேண்டுகோளை தென் கொரிய அரசாங்கம் ஏற்றுள்ளதாக தொழில் அமைச்சர் எம் எச் எம் அஷ்ரவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு தென் கொரிய தூதுக்குழு ஒன்று தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

தென் கொரியாவில் வேலை செய்ய தெரிவு செய்யப்படும் இலங்கையர்கள் கொரியாவில் இருவருடங்கள் கடமையாற்ற வேண்டும் என்றும் ஒரு வருடம் தொழில் நுட்ப பயிற்சி பெறல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. -க-ம

# தொண்டாவை பலவீனமாக்க சில அரசியல்வாதிகள் முயற்சி

(கொழும்பு)

இ. தொ. கா தலைவர் திரு. எஸ். தொண்டமானை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் பலர் ஈடுபட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

திரு தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் மோதல் இதன் ஆரம்ப கட்டமாக இருப்பதாக அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் தொண்டமானுடன் முரண்பட்டுக்கொண்ட செல்லச்சாமி குழுவுக்கு தனிக்கட்சி அமைக்கும் நோக்கம் தற்போதைக்கு இல்லை என்றும் அவ்வாறு அமைத்தாலும் அவர்களால் தற்போதைக்கு ஒன்றும் செய்ய முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதியிலுள்ள சிங்கள அரசியல் வாதிகள் மலையகத்தில் அரசியல் சூழ்நிலையை குழப்பும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -ரி

# பெரிய கல்லாறில் புதிய படை முகாம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு பெரிய கல்லாறு பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

மட்டு—கல்முனை வீதியிலேயே இம்முகாம் அமைக்கப்பட்டுள்ளது மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டே இப் புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இம்முகாம் அமைக்கப்பட்ட பின்னர் அவ்வீதி வழியாகச் செல்லும் வாகனங்களை படையினர் கடும் சோதனைக்குட்படுத்திவருகின்றனர். இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர் நோக்கிவருகின்றனர். —ரி

## 500 தபால் பொதிகளுடன் 'லாதுவ' இன்று வரும்

(யாழ்ப்பாணம்)

500 தபால் பொதிகளுடன் "லாதுவ" கப்பல் பருத்தித்துறைக்கு இன்று வந்து சேரவுள்ளதாக யாழ் தபாலக உயர் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் அத்தியாவசியப் பொருட்கள் உட்பட பல்வேறு பொருட்களுடன் புறப்பட்ட கோமாரி கப்பலும் விரைவில் பருத்தித்துறைக்கு வரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (59-ரி-ம)

### பென்சன் வவுச்சர்

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் ஜனவரி மாதத்திற்கான பென்சன் வவுச்சர்களும், காசோலைகளும் யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவிலிருந்து நேற்று தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் இவற்றை வங்கிகளில் திங்கட்கிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. -71-ம

## ராணுவ கட்டுப்பாட்டு பகுதி கடிதம் அனுப்பல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட எல்லைக்குட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கான கடிதங்களை அனுப்புவதற்கு எதிர்வரும் திங்கட்கிழமை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு முன்னர் யாழ் பிரதம அஞ்சலகத்திலுள்ள தபாற் பெட்டியில் கடிதங்களைச் சேர்க்குமாறு பிரதம அஞ்சலக நிர்வாகம் பொது மக்களைக் கேட்டுள்ளது. —59-ரி

### தமிழக பொலிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைத்துள்ளதாகத் தெரியவருகிறது தமிழக மாநில புலனாய்வு துறை இயக்குநருக்கும் புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாகவும் அவர் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கை பற்றிய முக்கிய செய்திகள், தகவல்கள் உள்துறை அமைச்சுக்கு தெரிவிக்கப்படவில்லை. இது நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயம் என்றும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### ஐ. நா, அதிகாரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லயத்தின் சேவையைத் தொடர்வது தொடர்பாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வரவிருந்த ஐ.நா நிதி பீற்றர் நிக்கிலஸின் விஜயம் போக்குவரத்து சீர்கேட்டினால் தடைப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ரி)

### மலேரியாவுக்கு குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

மலேரியாவின் தாக்கத்திற்குள்ளாகி கடந்த ஒரு மாதகாலமாக யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்பட்டிருந்த 5 வயதுக் குழந்தை ஒன்று நேற்று ஆஸ்பத்திரியில் மரணமானது.

இருபாலையைச் சேர்ந்த கஜினி குருணநிதி (வயது-05) என்ற பெண் குழந்தையே மரணமான குழந்தையாகும். -ரி

### ஆங்கில ஆசிரியர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசி நாள் பெப்ரவரி மாதம் 14-ம் திகதியென யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். 162-ரி

### இந்திரா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சியும் ஆதரவும் அளித்தன. ஈழப் போராளிகள் பயிற்சி முகாம்களை அமைத்துக்கொள்ள அனுமதியும் அளித்தன. அந்த அரசுகளின் அப்போதைய கொள்கைகளுக்கேற்ப இந்த உதவிகள் அளிக்கப்பட்டன என்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி குற்றம் சாட்டினார்.

ஜெயின் கமிஷன் முன் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விவகாரத்தில் தி. மு. க வின் கொள்கை நிலையானது. போதிய ஆய்வு செய்யாமல் இலங்கைக்கு இந்திய அமைதிப் படையை அனுப்பியதால் நமது இராணுவத்தினர் ஏராளமாக உயிரிழந்தனர். இதை தி. மு. க. குறை கூறியது.

1990-ம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையிலிருந்து இந்தியப் படை திரும்பிய போது அதை வரவேற்க நான் செல்லாததற்கு இது தான் காரணம். இது எந்த வகையிலும் இந்திய இராணுவத்தை அவமதிக்கும் நோக்கம் கொண்டதல்ல. இவ்வாறு மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரி)

### தாக்குதல்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 16ம் திகதி தமிழக மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படை நடத்திய தாக்குதல் குறித்தும் இச்சம்பவத்தின் போது ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாகவும் பிரதமருக்கு இக்கோரிக்கையை முதல்வர் விடுத்துள்ளார். (ரி)

# கொழும்பு பத்திரிகைகளில் மீனவர் தாக்குதல் குறித்து திரிபுபடுத்தி செய்தி பிரசுரம்

(கொழும்பு)

வடபகுதியில் ஸ்ரீ லங்கா கடற்படையினரின் தாக்குதலினால் அப்பாவி மீனவர்கள் கொல்லப்படும் வேளையில், எல்லாம் கொல்லப்படுபவர்கள் விடுதலைப் புலிகள் என சில அரச சார்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருவதாக கொழும்பு பத்திரிகையாளர் கூம்பெர்ஸ் தெரிவித்துள்ளார்;

இவரது கூற்றை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில், அண்மையில் வடமராட்சிக் கடலில் கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 9 அப்பாவி மீனவர்கள் கொல்லப்பட்டனர் என தெரிவித்து அப்பத்திரிகை கொல்லப்பட்ட மீனவர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் இறந்தவர்களின் மரணச்சடங்கில் தான் கலந்துகொண்டதாக மேற்படி நிருபர் தெரிவித்திருந்ததையும் அப்பத்திரிகை மேற்கோள்காட்டியிருந்தது.

கடற்படையினரால் அழிக்கப்பட்ட அப்பாவி மீனவர்களின் படகுகளை கடற்புலிகளின் அதிவேக நீருந்து விசைப் படகுகள் என அரசு சார்பு பத்திரிகைகள் திரித்து செய்தி வெளியிட்டதையும் அப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

### கருணாநிதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் முதல்தர சந்தர்பவாதி என்பது மீண்டும் நிருபணமாகியுள்ளது என்று வை. கோபாலசாமி குறிப்பிட்டார்.

அமைதிப்படை தாயகம் திரும்பியபோது அதனை வரவேற்க அன்று முதல்வராக இருந்த கருணாநிதி செல்லவில்லை. அது பற்றி சட்டப் பேரவையில் பிரச்னை எழுந்த போது ஏன் தமிழ்ச்சாதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்களை கொன்று குவித்து விட்டு வரும் படைக்கு வரவேற்பளிக்க நான் எப்படிப் போவேன் என்று அன்றைய முதல்வர் கருணாநிதி கூறினார். அதே கருணாநிதி தற்போது ஜெயின் கமிஷன் முன் தாக்கல் செய்துள்ள மனுவில் போதிய முன் ஆய்வு செய்யாமல் இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்பியதால் நமது ராணுவ வீரர்கள் ஏராளமான பேர் மடிந்தனர். அதனால் தான் அமைதிப்படை திரும்பிய போது நான் வரவேற்கச் செல்லவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (ரி)

### ஐ. தே. கவுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமசந்திர நேற்று அறிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைந்து கொள்ளாது என திரு. ஜி. எம். பிரேமச்சந்திர கடந்த புதன்கிழமை பி.பி.சி சந்தேசய சிங்கள சேவைக்கு தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் தமது கட்சி ஐ. தே. கவுடன் இணைந்து கொள்ள முடிவு செய்திருப்பதாக அவர் நேற்று சந்தேசிய சேவைக்கு அறிவித்தார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்கா ஐ. தே. கட்சியுடன் இணைந்து கொண்டாலும் தாம் அதனுடன் இணையப்போவதில்லை என திரு பிரேமச்சந்திரா ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இதேவேளையில் இன்று நடைபெறவிருந்த ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் அறிவித்தல் ஒன்றின் மூலம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

### முஸ்லிம் காங்கிரஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நாடாளுமன்றத்தில் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடவிருப்பதை அடுத்தே எனக்கு இந்தக் கொலை பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற எம். பி. என்ற வகையில் எனது உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து இந்தச் சபையின் கவனத்துக்கு கொண்டு வருவது எனது கடமையாகும்.

இது குறித்து நான் பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கும் அறிவித்துள்ளேன். -இ-ரி

இதற்குப் பதிலாக குருநாகலில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்திருந்தாலும் கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா இல்லாத காரணத்தால் அதனையும் நடாத்த முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. -இ-ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B